Drinking water well for Harijans

* 181. Q.—THIRU K. ARIVAZHAGAN (on behalf of THIRU S. S. THENNARASU): Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(a) whether the Government are aware of the fact that Caste Hindus obstruct the Harijans taking water from the well dug for Harijans in Vellur village, near Sivakasi, Ramanathapuram District; and

(b) if so, the action taken thereon?

அரிசனங்களுக்குக் குடிநீர் கிணறு.

திரு. க. அறிவழகன் (திரு. எஸ். எஸ். தென்னரசு சார்பில்): மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், சிவகாசிக்கு அருகில் உள்ள வெள்ளூர் கிராமத்தில் அரிசனங்களுக்காக வெட்டப்பட்ட கேணியில் அவர்களைத் தண்ணீர் எடுக்க விடாமல் ஜாதி இந்துக்கள் தடுத்துக்கொண்டிருப்பது அரசுக்குத் தெரியுமா?

(இ) ஆமெனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திருமதி சத்தியவாணி முத்து: (அ) & (இ) இராமநாதபுரம் மாவட்டம், வெள்ளூர் ஊராட்சி மன்றம் அரிசனங்களுக்கு வெள்ளூர் கிராம சர்வே எண் 272/8-ல் ஒரு குடிநீர் கிணறு தோண்டியுள்ளது. ஆனல் அது கிணறுக்குப் போகும் பாதை வசதி அளிக்கவில்லை. இது காறும் அரிசனங்கள் சர்வே எண் 272/6-ல் உள்ள ஒரு பட்டா நிலம் வழியாக கிணறுக்குச் செல்வதை வழக்கப்படுத்தி வந்தார்கள். இந்தப் பொதுக் குடிநீர்க் கிணறுக்கு அரிசனங்கள் செல்வதைத் தடுக்கும் முகமாக மேலே சொல்லப்பட்ட நிலத்தின் சொந்தக்காரர் பின்னர் ஒரு வேலி அமைத்துள்ளார். கிணறுக்குச் செல்லும் பாதைக்குத் தேவையான நிலத்தை ஆர்ஜிதம் செய்வதைத் தவிர வேறு வழியில்லையாதலால், மாவட்ட ஆட்சியர் இது சம்பந்தமாக தேவையான நடவடிக்கை எடுத்து வருகிறுர். அரிசனங்கள் இப்போது பிற தனிப்பட்ட கிணறுகளிலிருந்து குடிநீர் எடுத்து வருகிறுர்கள். அவர்கள் குடிநீர் பெறுவதற்கு எந்த விதத் துன்பத்திற்கும் உள்ளாகவில்லை.

Midday Meals Scheme in the schools run by the Harijan Welfare Department.

* 182. Q.—THIRU N. WILSON APPOLLOS (on behalf of THIRU L. BALARAMAN): Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—